நாள் -01.11.2025

**STC**. **No**.46/2025

**ம.சா.**1 மகாலிங்கம், த/பெ. கந்தசாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 01st **day of November** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனக்கு விவசாயம் தவிர்த்து வேறு தொழில்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் எனது மகளை கோவையில் படிக்க வைப்பதற்காக ரூபாய் 25 லட்சம் corporation bank now union bank வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். நான் மேற்படி கடன் 2014 ம் ஆண்டு வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி கடனை தான் என்னால் சரிவர கட்ட இயலவில்லை என்றால் சரியல்ல, முழு தொகையும் தற்போது கட்டி விட்டேன். நான் கார்ப்பரேஷன் வங்கியில் வாங்கிய கடன் ரூபாய் 25 லட்சம் திரும்ப செலுத்த முடியாமல் இருந்து வந்ததால் ஒரு வார காலத்திற்குள் திரும்ப செலுத்த வேண்டும், இல்லை என்றால் மேற்படி கடனுக்கு ஈடாக சொத்து கொடுத்த சொத்தை ஜப்தி செய்து விடுவதாக குறிப்பிட்டு வங்கியில் இருந்து எனக்கு நோட்டீஸ் வந்தது என்றால் சரிதான்.

2. எனக்கு பெரிய களந்தையில் 13 ஏக்கர் தவிர்த்து வேறு எந்த சொத்துக்களும் வேறு எங்கும் கிடையாது என்றால் சரிதான். நான் கார்ப்பரேஷன் வங்கியில் வாங்கிய கடனுக்காக அசல் மற்றும் வட்டி சேர்த்து ரூபாய் 35 லட்சம் தொகையை நான் பாலகுமார் என்பவரிடமிருந்து பெற்று மேற்படி கடனை வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். 17.11.2021 ம் தேதியின்று தான் நான் வங்கி கடன் ஈடாக கொடுத்திருந்த சொத்தினை MOD RELEASE செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் கடன் வாங்கிய பிறகு என்னால் மாத தவணை கட்ட முடியாததற்கான காரணம் வறட்சி மற்றும் அப்பொழுது தென்னை மரங்களுக்கு தஞ்சாவூர் வாடல் நோய் வந்தது என்றால் வறட்சி மட்டும் இருந்தது. மரங்களுக்கு எந்த நோயும் வரவில்லை. தேங்காய் வரத்தும் குறைவானது. ஆகவே என்னால் மாத தவணை சரிவர கட்ட இயலவில்லை என்றால் சரிதான்.

3. 2021 ம் ஆண்டு எனக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பாலகுமார் அவர்களிடம் கடன் வாங்குவதற்கு முன்பாக வேறு நபர்களிடமும் பணம் கேட்டு அவர்கள் எனது மகள் கையொப்பம் செய்தால் தான் பணம் தருவதாக சொல்லிவிட்டார்கள் என்றால் நான் நிறைய நபர்களிடம் கேட்கவில்லை ஒரு சிலரிடம் மட்டுமே கேட்டேன். மேற்படி ஒரு சிலர் என்னிடம் எனது மகளின் கையொப்பமும்

கேட்டார்கள். எனது மகள் எங்களது விருப்பத்தை மீறி வேறு ஒரு நபரை திருமணம் செய்து கொண்டதால் அப்பொழுது நான் கடன் வாங்கும் பொழுது கையொப்பம் என் மகளிடமிருந்து வாங்க இயலவில்லை என்றால் சரிதான். அப்பொழுது மேற்படி சமயத்தில் பாலகுமார் மட்டுமே எனது மகளின் கையொப்பம் இல்லாமலும் பணம் தருவதாக சொன்னார் என்றால் சரியல்ல, அப்பொழுது பணம் கொடுத்தார் கொடுக்கும் பொழுது எனது மகளிடம் பின்னர் கையொப்பம் வாங்கிக் கொள்ளலாம் என சொன்னார். மேலும் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தாலும் வழக்கை சந்தித்துக் கொள்ளலாம் என கூறினார்.

4. நான் பாலகுமாரிடம் ரூபாய் வாங்குவதற்கு முன்பாக நான் தனியார் நிதி நிறுவனத்தில் நான் மற்றும் எனது மனைவி இருவரும் சேர்ந்து கடன் வாங்கி உள்ளோம் என்றால் சரியல்ல. 02.09.2024ம் தேதியன்று நான் பாலகுமார் அவர்களிடம் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்தேன் என்றால் அதற்கு முன்பாகவே கொடுத்துவிட்டேன். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் பாலகுமார் அவர்களிடம் பணம் வாங்கும் பொழுது எனது சொத்தை கிரையம் கொடுத்தேன். பின்னர் முழு தொகையும் கொடுத்ததற்கு காரணம் அவரிடமிருந்து மேற்படி சொத்தை மீண்டும் எனது பெயருக்கு வர வேண்டும் என்பதற்காக தான் என்றால் நாங்கள் கிரையம் ஏற்படுத்திக் கொண்ட பொழுது முழு தொகையும் வரும்பொழுது அவர் என்னுடைய பெயருக்கு கிரையம் செய்து கொடுத்து விடுவதாக தெரிவித்து தான் ஏற்படுத்திக் கொண்டோம்.நான் பாலகுமார் அவர்களிடம் ரூபாய் 35 லட்சம் வரும் வரை தொகைகளை சேர்த்துக்கொண்டே இருந்தேன் என்றால். நான் பாலகுமார் அவர்களிடம் ரூபாய் 35 லட்சம் வரும் வரை தொகைகளை சேர்த்துக் கொண்டே இருந்தேன் என்றால் சரிதான்.

5. நான் ரூபாய் 35 லட்சம் தயார் செய்தவுடன் அன்றைய தினமே பாலகுமார் அவர்களிடம் ரூபாய் 35 லட்சத்தை கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். எனக்கு விவசாயம் மூலமாக வந்த வருமானத்தை கொண்டு ரூபாய் 35 லட்சத்தை நான் பாலகுமாருக்கு திரும்பி அளித்தேன். நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணம் முன்பே தயாராக இருந்திருந்தால் முன்பே பணத்தை கொடுத்து சொத்தை திரும்ப மீட்டிருப்பேன் என்றால் நான் ஒரு தவணையாக பணம் கொடுக்கவில்லை எனக்கு பணம் கிடைக்கும் போதெல்லாம் கொடுத்து வந்தேன். நான் பாலகுமார் அவர்களிடம் வாங்கிய பணத்தை கொடுக்கும் வரை நான் எந்த சொத்தையும் வாங்குவதற்கோ அல்லது வேறு எந்த விதமான சொத்துக்களை வாங்குவதற்கோ எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரதான நோக்கம் என்னுடைய சொத்தை மீண்டும் மீட்பது தான் என்றால் சரிதான்.

6. 02.09.2024ம் தேதியன்று நான் பாலகுமார் அவர்களுக்கு பணம் கொடுத்து விட்டதாக நான் தாக்கல் செய்த O.S. NO :1192/2024 4TH ADJ, COIMBATORE சொல்லி உள்ளேன் என்றால் அது சம்பந்தமாக தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பாலகுமார் அவர்களிடம் இருந்து

வாங்கிய தொகையை திரும்ப செலுத்தி சொத்தை மீட்க போதிய பணம் இல்லாத சூழ்நிலையில் 01.07.2024 ம் தேதி எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூபாய் 25 லட்சம் கொடுத்து இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல கொடுத்தேன். ஆக மொத்தம் நான் மேற்படி காலத்தில் ரூபாய் 60 லட்சம் பாலகுமார் அவர்களிடம் ரூபாய் 35 லட்சம் மற்றும் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூபாய் 25 லட்சம் ஆக மொத்தம் 60 லட்சம் இருந்ததற்காக எந்த ஆவணங்களும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அப்பொழுது என்னிடம் பணம் இருந்தது. எனக்கு காட்டம்பட்டி கிளை, இந்தியன் வங்கி சேமிப்பு கணக்கு எண் 5583304594 உள்ளது என்றால் சரிதான்.

7. 01.04.2022 **TO** 31.03.2023 வரையிலான கணக்கு பட்டியலை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். வழக்கு காசோலை தவிர 5 காசோலைகள் ( 080781, 080783, 080784, 080785, 080786 )நான் எனது வசம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை தவிர்த்து வேறு எந்த காசோலையும் எதிரியுடையது, என்னிடம் இல்லை. நான் எதிரிக்கு ரூபாய் 25 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 04.04.2020 **TO** 28.12.2023 வரை எதிரி தான் எனக்கு ரூபாய் 24,68,000 அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரியும் எனக்கு பணம் கொடுப்பார். பணம் வங்கிக்கு அனுப்பியுள்ளாரா என எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. ( சாட்சி குறுக்கு விசாரணையின் பொழுது முதலில் பணம் ரூபாய் 24,68,000 வங்கியில் வந்துள்ளதாக ஒப்புக்கொண்டு பின்னர் மறுதலித்தார்).

8. நான் எதிரியிடமிருந்து வங்கி மூலமாக வந்த பணத்தை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யான வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல. நான் தான் எதிரியிடமிருந்து வாங்கிய பணத்தை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு வழக்கு காசோலையை எதற்காகவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூபாய் ஒரு கோடியே 5 லட்சம் கடன் வாங்கி தருவதாக கூறி ஆறு காசோலைகள் எதிரியிடமிருந்து பெற்று அதில் ஒரு காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் எதிரி எதிரியின் மனைவி மற்றும் பாலகுமார் ஆகியோர்கள் மீது மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேன் என்றால் நான் அளிக்கவில்லை. எனது வழக்கறிஞரிடம் விவரத்தை சொன்னேன் அவர் அளித்தார். மேற்படி புகாரில் நான் தான் புகார்தாரர் என்றால் சரிதான். நான் எதிரி, எதிரியின் மனைவி மற்றும் பாலகுமார் ஆகியோர்கள் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகாரில் எதிரி மற்றும் பாலகுமார் எதிரில் மனைவி 3 பேரும் மேற்படி என்னுடைய சொத்தை மீண்டும் எனக்கு கிரையம் செய்து வைக்க மறுக்கிறார்கள் என குறிப்பிட்டு தான் புகார் அளித்தேன்.

9. மேலும் எனது நிலத்தை மீட்டுத் தருமாறு குறிப்பிட்டு தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் நெகமம் காவல்

நிலையத்திற்கு மாறுதலாகி நெகமம் காவல் நிலையம் என்னையும் எதிரி, பாலகுமார் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எதிரி காவல் நிலையத்தில் அனைத்து விசாரித்த பொழுது தனக்கும் பெரிய களந்தையில் எனக்கு உள்ள நிலத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டார் என்றால் சரிதான். நான் எதிரியும் பாலகுமாரும் இருவரும் நண்பர்கள் என நினைத்து நான் மேற்படி நிலத்தை பாலகுமாரிடமிருந்து என்னுடைய பெயருக்கு எழுதி வாங்குவதற்கு எதிரியிடம் வலியுறுத்தினேன் என்றும் அதற்கு எதிரி தாமதிக்காததால் நான் மேற்படி கடன் வாங்கி தருவதற்காக கொடுத்த ஆறு காசோலைகளில் ஒரு காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.01 19:18:57 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**